# பதவிகள் - வெற்றிடம்

## அரச சேவை ஆணைக்குழு

### இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்கு பதவியுயர்வு செய்வதற்காக விண்ணப்பங்களைக் கோரல் - 2005

இலங்கை கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் I ஆம் தரத்திலிருக்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அச்சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கீழ் ஆவணப்படுத்தப்பட்ட பதவியில் 5 வருடத்தை விடக் குறையாத திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருக்கும் சேவையில் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கும் உத்தியோகத்தர்கள் மேற்கூறப்பட்ட பதவியுயர்வுக்காக விண்ணப்பிக்கத் தகைமை பெற்றுள்ளனர்.

1. (i) கல்வி முகாமைத்துவம் தொடர்பான பட்டம் அல்லது டிப்ளோமாவுடன் கீழ்க்குறிப்பிடப்பட்ட கல்வி மற்றும் தொழிற்றகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் :-

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கல்வி தொடர்பாக 1 ஆவது அல்லது 2 ஆவது வகுப்பில் (உயர்) பட்டம் பெற்றிருத்தல் அல்லது கல்வி தொடர்பாக உயர் பட்டம் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் உரிய பாடத்துறை தொடர்பாகப் பட்டம் பெற்றிருத்தல் மற்றும் அதிவிசேட அல்லது திறமைச் சத்தியுடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா அல்லது உரிய பாடத்துறை மூலம் பட்டப்பின் படிப்பு பெற்றிருத்தல் ;

அல்லது

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் 1 ஆம் வகுப்பில் அல்லது 2 ஆம் வகுப்பில் (உயர்) சித்தியுடன் பட்டம் மற்றும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா அல்லது உரிய பாடத் துறையில் கல்வி தொடர்பான பட்டப்பின் படிப்பு பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- உரிய தினமன்று கல்வி கல்லூரி ஒன்றின் நிரந்தர விரிவுரையாளராக அல்லது உதவி விரிவுரையாளராக 5 வருடத்தை விடக் குறையாத சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருக்கும் 45 வயதைத் தாண்டியுள்ளவர்கள் மேற்கூறப்பட்ட (1) ஆம் உப பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள கல்வி முகாமைத்துவம் தொடர்பான பட்டம் அல்லது டிப்ளோமா இருக்க வேண்டியதன் தேவையில் இருந்து மாத்திரம் விடுவிக்கப்படுவர்.

(ii) ***சம்பளத் திட்டம்***.- வருடாந்தம் ரூபா 1,55,100 - 7 x 5,520 - ரூபா 1,93,740. இது பொது நிர்வாக சுற்று நிருபத்திற்கமைய மாறக்கூடியதாகும்.

(iii) ***தேர்ந்தெடுத்தல்***.- அரச சேவை ஆணைக்குழு சபையினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பதவியுயர்வு வழங்குவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும்.

2. மேற்கூறப்பட்ட தகைமைகள் கொண்ட விண்ணப்பதாரர்கள் கீழ்க்குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தமது விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்து தாம் சேவையாற்றும் கல்வியியற் கல்லூரி/ஆசிரிய மத்திய நிலையத்தில் தற்பொழுதுள்ள நிறுவனத்தலைவரின் பரிந்துரையுடன் 2006.06.19 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**குறிப்பு**.- தேர்ந்தெடுக்கப்படுவது ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் பிரமாணக் குறிப்பின் 15 ஆவது பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைக்கமையவாகும்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

ஆரியரத்ன ஹேவகே,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இருசுபாய",
பெலவத்தை,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரச சேவை ஆணைக்குழு**

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்கு பதவியுயர்வு வழங்கல் - 2005

1. முழுப் பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ☐
2. அலுவலக முகவரி : ☐
3. சொந்த முகவரி : ☐
4. பிறந்த திகதி : ☐
   (i) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணப்படுத்தப்பட்ட பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :-----.
   (ii) சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா ? ஆம்/இல்லை ☐
   (iii) அச்சேவையின் வகுப்பு 2-II தரத்திற்கு பதவியுயர்வு பெற்ற திகதி : ☐
   (iv) அச்சேவையின் வகுப்பு 2-II தரத்தில் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்துள்ளீரா? : ஆம்/இல்லை
   (v) அச்சேவையின் வகுப்பு 2-II தரத்தின் சேவைக்காலம் : ☐
5. (i) கல்வித் தகைமை :-----.
   (ii) தொழிற்றகைமை :-----.
6. பட்டம் பெற்றது ஆங்கில மொழி மூலம் அல்லாததாக இருந்தால் ஆங்கில மொழித்திறன் தொடர்பாக தற்போது பெற்றுள்ள சித்தி : ☐

